அனுப்புநர்

முனைவர். திரு. வி.சி. இராமேஸ்வரமுருகன்
இயக்குநர்,
பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி
இயக்ககம்
சென்னை–06

பெறுநர்

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க எண். 743 /ஆ3/2020, நாள்: 27.11.2020

பொருள் பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–06 – **"கற்போம் எழுதுவோம் இயக்கம்" – புதிய வயது வந்தோர் கல்வித் திட்டம்** செயல்படுத்துதல் – 30.11.2020 பிற்பகல் அன்று காணொளி வாயிலான ஆய்வுக்கூட்டம் நடத்துதல் – சார்பு.

பார்வை 1.மத்திய அரசு பள்ளிக்கல்வித்துறை கடித எண். No9-3/2020-NLM.1, நாள் : 08.05.2020,30.09.2020,14.10.2020
2.திட்ட ஒப்புதல் வாரியக் கூட்டம் (Project Approval Board(PAB) , நாள் : 21.10.2020
3.மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காணொளிக் கூட்டம் நாள் 23.10.2020,05.11.2020, மற்றும்,18.11.2020

*****

பார்வையிற் காணும் கடிதங்கள் மற்றும் 21.10.2020 அன்று நடைபெற்ற திட்ட ஒப்புதல் வாரியக் கூட்ட (Project Approval Board(PAB)) முடிவுகளின் படி, **கற்போம் எழுதுவோம் இயக்கம் என்கிற புதிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தை,** மத்திய மற்றும் மாநில அரசுகளின் **60:40** என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாவட்ட அளவில் இத்திட்டம் சார்ந்து கீழ்காணும் விவரங்கள் மீதான **ஆய்வுக்கூட்டம் 30.11.2020** அன்று மாலை **4.00** மணி அளவில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் (TNLMA) அவர்களின் தலைமையின் கீழ் காணொளி வாயிலான (VIDEO CONFERENCING) கூட்டம் நடத்தபட உள்ளது.

1. கற்போர் மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் இலக்கு மற்றும் எண்ணிக்கை ஆகியனவற்றை TN-EMIS கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள்,
2. தங்கள் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ள கற்போர் மையங்கள் எண்ணிக்கை விவரங்கள்
3. தங்கள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள புதுமைச் செயல்பாடுகள் (Innovation Activities) விவரங்கள்
4. மாவட்டம் மற்றும் கல்வி மாவட்ட அளவில் நடைபெற்ற பயிற்சி விவரங்கள்
5. கற்போர் கட்டகம் (Learner's Primer) மற்றும் தன்னார்வல ஆசிரியர் கட்டகம் (Volunteer Teacher's Primer) தங்கள் மாவட்டத்தில் பெறப்பட்ட எண்ணிக்கை மற்றும் மையங்களுக்கு வழங்கப்பட்ட விவரங்கள்
6. கற்போர் மற்றும் தன்னார்வல ஆசிரியர்களுக்கான வருகைப்பதிவேடு விவரங்கள், மையத்தில் நடைபெறும் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகள் விவரங்கள், அலுவலர்களுக்கான கண்காணிப்பு படிவங்கள் ஆகியனவற்றை EMIS வாயிலாக பதிவேற்றம் செய்தல்.
7. கண்காணிப்பு செய்வதற்காக மாவட்ட அளவில் நியமிக்கப்பட்ட அலுவலர்களின் விவரங்கள்

இவ்வாய்வுக்கூட்டத்தில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (உயர் நிலைக் கல்வி), மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் (DIET), ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், புள்ளியியல் அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (சமக்ர சிக்ஷா) ஆகியோர் தவறாது பங்கேற்க தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வுக்கூட்டத்திற்கான இணைப்பு விவரங்கள் (LINK) விரைவில் இவ்வியக்ககத்தினால் வழங்கப்படும்.

இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர்
கல்வி இயக்ககம், சென்னை–06

24/11/2020

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது
1. மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் (TNLMA)
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

நகல் கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. பள்ளிக்கல்வி இயக்குநர்.
3. மாநில கல்வியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர்.